பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 06 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- யோகா பயிற்சி மனதில் நேர்மறை எண்ணத்தை உருவாக்குவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆக அதிகரித்துள்ளது.
- தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.
- தேசிய தேர்வு முகமை தொடர்பான விவகாரங்கள் குறித்து விசாரணை நடத்த உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

யோகா பயிற்சி மனதில் நேர்மறை எண்ணத்தை உருவாக்குவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினத்தையொட்டி ஜம்மு-கஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள **Sher-i-Kashmir** சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டார்.

பின்னர் பேசிய அவர், யோகா நமது உடலுக்கு வலிமை அளிப்பதாகவும், உலக அளவில் இப்பயிற்சியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

யோகா பயிற்சியில் ஈடுபட்டு வரும் அனைவருக்கும் அவர் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, மத்திய அமைச்சர் திரு. பிரதாப் ராவ் கனபத் ராவ் ஜாதவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக நேற்று ஆரோக்கியத்திற்காக யோகா மற்றும் சிறுதானியங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அனைத்து கிராமப் பஞ்சாயத்து தலைவர்களையும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற யோகா நிகழ்வில் மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மாணவர்களுடன் இணைந்து பங்கேற்றார்.

இதற்கிடையே நோயின்றி வாழவும், நினைவாற்றலை அதிகரிக்கவும் யோகா பயிற்சி நன்மையளிப்பதாக வேலூரைச் சேர்ந்த யோகா ஆசிரியர் திரு. சுந்தரராஜன் எமது செய்தியாளரிடம் கூறினார்.

யோகா பயிற்சியில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் உடலும், மனமும் ஆரோக்கியமாக உள்ளதாக வேலூரைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நேபாளம், மாலத்தீவு, இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் சர்வதேச யோகா நிகழ்ச்சிக்கு இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

<<<<>>>>

இலங்கை சென்ற வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அந்நாட்டு அதிபர் திரு. ரணில் விக்கிரமசிங்க-வை சந்தித்துப் பேசினார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையேயான வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம் குறித்தும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

பின்னர் இலங்கைப் பிரதமர் திரு. தினேஷ் குணவர்தனே மற்றும் அந்நாட்டு முக்கிய தலைவர்களையும் திரு. ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

தேசிய தேர்வு முகமை தொடர்பான விவகாரங்கள் குறித்து விசாரணை நடத்த உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இக்குழு தேர்வு முகமையின் செயல்பாடு, தேர்வு முறை உள்ளிட்டவை குறித்து பரிந்துரைகள் அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நீட் நுழைவுத் தேர்வில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக பீஹார் அரசை, மத்திய அரசு தொடர்புகொண்டு விசாரித்து வருவதாக அவர் கூறினார்.

குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களின் நலன் பாதுகாக்கப்படுவதில் அரசு உறுதியுடன் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

நீட் தேர்வு விவகாரம் தொடர்பான வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மக்களவையின் இடைக்கால தலைவராக திரு. **Bhartruhari Mahtab**-ஐ குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.

அவர் மக்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

இப்பணியில் அவருக்கு உதவியாக மக்களவை உறுப்பினர்கள் திரு. சுரேஷ் கொடிகுன்னில், தலிக்கோட்டை ராஜுதேவர் பாலு, திரு. ராதாமோகன் சிங், திரு. **Faggan Singh Kulaste,** திரு. சுதீப் பந்தோபாத்யாய் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

யு.ஜி.சி-யின் தேசிய தகுதித் தேர்வு தொடர்பாக சிபிஐ வழக்குப் பதிவு செய்துள்ளது.

இது தொடர்பாக கல்வித்துறை செயலாளர் அளித்த புகாரின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்வில் தவறு நிகழ்ந்திருக்கலாம் என்று யு.ஜி.சி-க்கு தகவல் கிடைத்ததையடுத்து, அளிக்கப்பட்ட புகார் காரணமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சி.பி.ஐ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

வேட்புமனு மீதான பரிசீலனை வரும் 24ஆம் தேதி நடைபெறுகிறது. மனுக்களை திரும்பப் பெற 26ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 13ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

<<<<>>>>

தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல்படை முகாமில் பாதுகாப்பு இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் ஆய்வு மேற்கொண்டார்.

அதைத் தொடர்ந்து படகு மூலம் ராமேஸ்வரம் தனுஷ்கோடி கடற்பகுதிகளில் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக அரக்கோணம் அருகேயுள்ள ஐ.என்.எஸ். ராஜாளி கடற்படை விமான தளத்தை பார்வையிட்டார்.

இந்த தளத்தில் தற்போது மேற்கொள்ளப்படும் பணிகள், கடல்சார் நடவடிக்கைகள், கட்டமைப்பு வசதிகள் குறித்து அமைச்சர் திரு. சஞ்சய் சேத் கேட்டறிந்தார்.

<<<<>>>>

திருவண்ணாமலையில் நடைபெறும் பௌர்ணமி கிரிவலத்தை ஒட்டி தாம்பரம் - திருவண்ணாமலை இடையே இரு மார்கங்களிலும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது.

தாம்பரத்தில் இருந்து இன்று பிற்பகல் 12 மணிக்கு புறப்படும் இந்த ரயில், மாலை 4 மணிக்கு திருவண்ணாமலையை சென்றடையும்.

மறுமார்கத்தில் நாளை திருவண்ணாமலையில் இருந்து காலை 8 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், பிற்பகல் மணி 12.30க்கு தாம்பரம் வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கன்னியாகுமரி – திப்ருகர் இடையே வாரம் 5 நாட்கள் இயக்கப்படும் விவேக் அதிவிரைவு ரயில், அடுத்த மாதம் 12ஆம் தேதி முதல் நாள்தோறும் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தென்மேற்கு பருவமழை குறித்த பேரிடர் ஆயத்தப் பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்வேறு துறை உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பேரிடர் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் அப்போது விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழைப் பொழிவு இயல்பாகவோ, அல்லது இயல்பைவிட சற்று கூடுதலாகவோ இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் வகையில் மீட்புப் படையினரை தயார் நிலையில் வைத்திருக்குமாறு தலைமைச் செயலாளர் அப்போது கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆக அதிகரித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கள்ளக்குறிச்சி, சேலம், புதுச்சேரியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

<<<<>>>>

## இருவரிச் செய்திகள்

பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா இரண்டு நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

<<<<>>>>

முன்னாள் படை வீரர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமை இன்று ஹிண்டன் விமானப் படைத்தளத்தில் நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

<<<<>>>>

நிலக்கரி சுரங்கங்களுக்கான வணிக ரீதியான 10வது சுற்று ஏலம் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டத்தில் பளியர் இன மக்களுக்கு அரசின் நலத்திட்டங்களை வழங்குவது குறித்து துறை அலுவலர்களுடன் ஆட்சியர் திருமதி பூங்கொடி ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

ஓவிய, சிற்பக் கலைஞர்கள் மற்றும் குழுவினர் கலைப் படைப்புகளை வெளிப்படுத்த, அரசு நிதியுதவி பெற அடுத்த மாதம் 5ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கலைப் பண்பாட்டுத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

சென்னையில் உள்ள வள்ளுவர்கோட்டத்தில் 80 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கரூர் மாவட்டம் தரகம்பட்டியில் 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' என்ற திட்டம் தொடர்பாக ஆட்சியர் திரு. பிரபுசங்கர் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

நெல்லை மாவட்டம் களக்காடு பகுதியில் யானை தந்தத்தை விற்க முயன்ற 7 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் கூட்டு ஆய்வுக் குழு ஒருங்கிணைந்து செயல்பட்டு போதைப்பொருள் உபயோகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் திருமதி உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா 47 ரன் வித்தியாசத்தில் ஆஃப்கனிஸ்தானை வென்றது.

பிரிட்ஜ்டவுனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ், 28 பந்துகளில் 53 ரன் எடுத்தார்.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஃப்கனிஸ்தான், 20 ஓவரில் 134 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நார்த்சவுண்டில் தற்போது நடைபெற்று வரும் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற 141 ரன் எடுக்க வேண்டும் என்ற இலக்கினை பங்களாதேஷ் அணி நிர்ணயித்துள்ளது.

<<<<>>>>